1971 ஜூலை 26] [திரு. ப. உ. சண்முகம்]

வரைவு திருத்தங்கள்.

மேற்படி விதிகளில்,—

(1) 1-வது விதியில், "சென்னை 1965-ம் ஆண்டு நிலச் சீர்த் திருத்தங்கள் (உபரி நிலங்களை ஒருவகை செய்தல்) விதிகள்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "தமிழ்நாடு 1965-ஆம் ஆண்டு நிலச் சீர்த்திருத்தங்கள் (உபரி நிலங்களை ஒருவகை செய்தல்) விதிகள்" என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(2) 2-வது விதியில் (a) துணைவிதியில், "சென்னை 1961-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) சட்டம் (சென்னை சட்டம் எண் 58/1961)" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் எண் 58/1961" என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(3) 5-வது விதியில் (1) துணை விதியில் (iii) பகுதிக்குப் பதிலாகப் பின்வரும் பகுதி அமைத்துக் கொள்ளப்பட வேண்டும், அதாவது :—

"இந்தியத் தேசிய ராணுவத்தில் பணியாற்றிவர்களும், 1950 சனவரி 26-ஆம் நாளுக்கு முன்னர் ஓய்வு பெற்ற அல்லது படைக் கலைப்புக் காரணமாக அனுப்பிவிடப்பட்ட ராணுவப் படைஞர்களும் உட்பட ராணுவப் படைகளைச் சேர்ந்துள்ள அல்லது சேர்ந்திருந்த ஒருவர்".

(4) 9-ஆவது விதியில் (vi) துணைவிதியில், "சென்னை 1864-ஆம் ஆண்டு வரி வருவாய் வசூல் சட்டம்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "தமிழ்நாடு 1864-ஆம் ஆண்டு வரி வருவாய் வசூல் சட்டம்" என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(5) நிலச் சீர்த்திருத்த (உபரி நிலத்தை ஒருவகை செய்தல்) விதிகளைச் சேர்ந்த A,B,C,D படிவங்களில் "சென்னை 1965-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (உபரி நிலங்களை ஒருவகை செய்தல்) விதிகள்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "தமிழ்நாடு 1965-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (உபரி நிலங்களை ஒருவகை செய்தல்) விதிகள்" என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(6) மேற்சொன்ன விதிகளைச் சேர்ந்த E F. படிவங்களில், "சென்னை 1965-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (உபரி நிலங்களை ஒருவகை செய்தல்) விதிகள்" என்ற சொற்றொடருக்கும், "ஸ்ரீ" என்ற சொல்லுக்கும் பதிலாக, "தமிழ்நாடு 1965-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (உபரி நிலங்களை ஒருவகை செய்தல்) விதிகள்" என்ற சொற்றொடரையும், "திரு" என்ற சொல்லையும் முறையே அமைத்துக் கொள்ள வேண்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானம் வந்திருப்பது மிகவும் உதவிகரமானதாக இருக்கிறது. இங்கே ஐடெம் (3)-ல்

"for clause (iii) of sub-rule (1) of rule 5, the following shall be substituted, namely :—

"A person who is or who has been a member of the Armed Forces, including persons who have served in the Indian National Army and members of the armed forces who retired or were disbanded before the 26th January 1950";

என்று இருக்கிறது. பொதுவாகக் கொண்டுவந்திருப்பது, ஐ.என்.ஏ. சோல்ஜர்கள் ஆர்ம்ட் போர்சில் இருந்ததாகச் செய்திருப்பது மிகவும் விரும்பத்தக்கது. வரவேற்கத்தக்கது. இன்னமும் ஆர்ம்ட் போர்சில் இருந்ததாக அவர்கள் வேறு வகைகளில் கருதப் படவில்லை. நில உச்சவரம்புச் சட்டத்தில் கீழ் வரும் நிலங்களைக் கொடுப்பதில் இந்த ஐ.என்.ஏ.காரர்கள் சேர்க்கப்பட்டிருப்பது மிக மிக வரவேற்கத்தக்க அம்சம் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

பி.ப. 2·35 மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைகின்றன. மீண்டும் நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.

(9) பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

@ 174. Notification issued with G.O. Ms. No. 192, Rural Development and Local Administration, dated the 9th February 1970, making the Madras Corporation Servants' Conduct Rules, 1968. [Laid on the Table of the House under section 348 (*d*) of the Madras City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919).].

@ 175. Notification issued with Roc. No. 98121/70-E5, dated the 25th August 1970, in regard to extension of certain provisions of the Tamil Nadu District Municipalities Act, 1920 in the entire area of Pullambadi Town Panchayat in Tiruchirappalli district. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).].

@ 176. Notification issued with Roc. No. 101490/69-P2, dated the 3rd December 1969, in regard to exclusion of Vallinayagipuram for Constitution of separate Panchayat. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).].

177. Notification issued with Roc. No. 23370/70-P1, dated the 2nd March 1970 in regard to exclusion of certain areas from the existing Thadicheri Panchayat in Periyakulam taluk of Madurai